**செய்தி வெளியீடு எண்: 745** **நாள்: 12.12.2012**

# <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்கமாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.**செல்லூர் கே.ராஜு** அவர்கள் சென்னை மற்றும் புறநகர் பகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டார் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் பொருள்களின் அளவு குறைவாக வழங்கும் ஊழியர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (12.12.2012) மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் பண்டிகை காலம் முன்னிட்டு, பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் தங்குதடையின்றி வழங்குவதை உறுதிசெய்யும்பொருட்டு, சென்னையில் கே.கே.நகர், எம்.ஜி.ஆர்.நகர், முகப்பேர் மற்றும் புறநகர்ப் பகுதியான கூடுவாஞ்சேரி ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், மேற்படி நியாயவிலைக் கடைகளில் உள்ள மின்னணு தராசு, மண்ணெண்ணெய் அளவு போன்றவற்றை சரிபார்த்ததுடன் பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். மேலும், இருப்பு பதிவேட்டுடன் பொருள்களின் அளவினையும் சரிபார்த்தார்.

அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது:

“குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கவேண்டிய அத்தியாவசியப் பொருள்களான அரிசி, சக்கரை, மண்ணெண்ணெய், பருப்பு, மைதா,. கோதுமை, பாமாயில் போன்ற பொருள்களை பொதுமக்கள் கோரும் சமயத்திலேயே சிரமம் ஏற்படாவண்ணம் ஒரே தவணையில் கொடுக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

எதிர்வரும் கிருஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களை பண்டிகை காலத்திற்கு முன்பே வழங்க வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும், நியாயவிலைக் கடைகளில் உள்ள விலைப்பட்டியலை பொதுமக்கள் அறியும் வகையில், அவர்கள் பார்க்கும்வண்ணம் வைக்கப்பட வேண்டும் என்றும், இருப்பு விவரப்பட்டியலை தினமும் பொருள்களின் விவரத்துடன் குறிப்பிட்டு பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் ஊழியர்களுக்கு உத்தரவிட்டார்.

பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களை சரியான எடை மற்றும் அளவில் வழங்க வேண்டும் என்றும், இதைக் கடைப்பிடிக்காத தவறுசெய்யும் ஊழியர்கள்மீது தயவுதாட்சணயமின்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஊழியர்களை எச்சரித்தார்.

இந்த ஆய்வின்போது கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி.வி.கலையரசி, இ.ஆ.ப., இணைப்பதிவாளர் டாக்டர் நா.வில்வசேகரன் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**